<u>ஏல விற்பனை அறிவிப்பு</u>

**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட், சின்னமண்ணூர் கிளை**

**தேதி:24.11.2023**

செக்யூரிட்டைஷேசன் மற்றும் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிட்டி இன்ட்ரெஸ்ட் ஆக்ட் 2002 (SARFAESI Act - 2002) ன் படி மற்றும் 2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிசொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 8(6) மற்றும் 9(1) -ன் கீழ் வங்கியிடம் அடமானத்தில் உள்ள அசையா சொத்தின் விற்பனை அறிவிப்பு

இதனால் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்/பங்குதாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் **சின்னமனூர்** கிளையில் அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்து மேற்படி வங்கியின் மதுரை மண்டலத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டு "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ள நிலையில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கடன்தாரர் **கடன்தாரர்: திரு.M.கூடலிங்கம்,** த/பெ.**திரு.முத்தையா**, கதவு எண்.25A, விஸ்வன்குளம், சின்னமனூர் - 625515 ஆகியோரிடமிருந்து எங்களது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, **சின்னமனூர்** கிளைக்கு **31.10.2023** வரை வரவேண்டிய பாக்கித்தொகை **ரூ.5,03,680.20 (Overdraft)** (ரூபாய் ஐந்து லட்சத்து மூன்றாயிறத்து அறு நூற்றி எண்பது மற்றும் பைசா இருபது மட்டும்) மற்றும் **07.11.2023** தேதிப்படி **ரூ.1,43,493.39 (Term Loan)** (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து நானூற்றி தொன்னூற்றி மூன்று மற்றும் பைசா முப்பத்தி ஒன்பது மட்டும்) மற்றும் அதன் பின்வரும் வட்டி, செலவுத்தொகையையும் சேர்த்து வசூல் செய்வதற்காக **28.12.2023** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஏல நிர்ணயத்தொகை ரூ.11,70,000/- (ரூபாய் பதினோறு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.1,17,000/-.

| | |
|---|---|
| **ஏலம் நடைபெறும் இடம்:** | **தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், சின்னமனூர் கிளை,<br>D.No.176A, கம்பம் மெயின் ரோடு, கே.கே.குளம்<br>சின்னமண்ணூர் - 625 515<br>தொலைபேசி: 04554 - 247 271<br>செல்: 98424 47271** |
| **ஏலம் நடைபெறும் தேதியும், நேரமும்:** | **28.12.2023 & பிற்பகல் 03.30 மணி** |
| **ஏல நிர்ணயத்தொகை** | **ரூ.11,70,000/-<br>(ரூபாய் பதினோறு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)** |

**அசையா சொத்தின் விபரம்**

தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், சின்னமனூர் துணை பதிவு மாவட்டம், முன் 16வது வார்டு, தற்போது 19வது வார்டு, விஸ்வன்குளம் வீட்டடி புஞ்சை சர்வே 282/3 நம்பர் ஏக்கர் ஒன்று செண்டு 64 அறுபத்தி நான்கில் வடபுரம் தொலை தொடர்பு அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏக்கர் 1 செண்டு 35 போக மீதி தென்புரம் உள்ள செண்டு 29 இருபத்தி ஒன்பதில் தென்புரம் செண்டு 17 1/2 பதினேழரையில் பாதைக்காக ஒதுக்கிய செண்டு 1 1/2 ஒன்றரை போக மீதி வடபுரம் செண்டு 6 ஆறில் வடபுரத்திற்கு அடுத்த தென்புரம் உள்ள செண்டு 03 மூன்றில் வடபுரம் மேல்கண்ட விவரப்படி எங்களுக்குப் பாத்தியமான வரிவிதிப்பு எண் 6800க்கு தற்போது போர் நம்பர் 25A உள்ள மனையில் கட்டப்பட்ட வீட்டுக்கு மால்.

வடக்கு : கணேசன் அவர்கள் வீடு
மேற்கு : ஈஸ்வரி அவர்கள் வீடு
தெற்கு: மகேந்திரன், பழனிச்சாமி இவர்கள் வீடு
கிழக்கு : தென்வடல் வீதி

இம்மாலில் கட்டுப்பட்ட வடபுரம், தென்புரம் கிழமேல் அடி 44 நாற்பத்தி நான்கு, கீழ்புரம், மேல்புரம் தென்வடல் அடி 18 பதினெட்டுக்கு 792 சதுரடிக்கு பாத்தியங்கள் உள்பட சேர்த்து சர்வடக்கம்

மேற்கூறிய சொத்து **திரு.M.கூடலிங்கம்,** த/பெ.**திரு.முத்தையா** பெயரில் உள்ளது.

**குறிப்பு:** வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கடன்தாரர்க்கு முழு தொகையும் செலுத்தி சொத்தினை மீட்டுகொள்வதற்கான 30 நாட்கள் கால அவகாசம் கொண்ட செக்யூரிட்டி இன்ட்ரெஸ்ட் ஆக்ட் 2002 இன் வீதி 8(6)ன் படி ஏல அறிவிப்பு அனுபப்பட்டு கடன்தாரர் அதனை செலுத்த தவறிவிட்டனர்.

**நிபந்தனைகள்:**

1. ஏலம் கேட்பவர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் 10% தொகையை வைப்பீட்டுத் தொகையை தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், பெயருக்கு **சின்னமனூர்** கிளையில் டிமாண்ட் டிராப்ட் மூலமாக **28.12.2023 அன்று பிற்பகல் 03.00** மணிக்கு முன்பதாக செலுத்த வேண்டும்.
2. மேற்படி சொத்தை காலை ஏலம் நடைபெறுவதற்கு முன்னர் காலை 10 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரையிலும் கிளை மேலாளர், தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்க் லிமிடெட், **சின்னமனூர்** கிளை (தொலைபேசி: **04554 - 247 271;** செல்: **98424 47271)** அவர்களுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவித்து நேரம் ஒதுக்கி பார்வையிட்டு கொள்ளலாம்.
3. ஏலம் எடுத்த நபர்கள் ஏலம் எடுத்தவுடன் ஏல தொகையில் 25% தொகையை (EMD சேர்த்து) உடனடியாக அல்லது மறு நாள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் வைப்பீட்டு தொகை திரும்ப தரப்பட பாட்டாது மற்றும் வைப்பீட்டு தொகை முழுவதுமாக இழக்க நேரிடும் மற்றும் இந்த சொத்து பொது ஏலம் மூலம் மறுவிற்பனை செய்யப்படும்.
4. ஏலத்தில் வெற்றி பெற்றவர் ஏல தொகையில் மீதம் உள்ள 75% தொகையை விற்பனை முடிந்த 15 நாட்களுக்குள் அல்லது அங்கீகாரம் பெற்ற அதிகாரி உடன் ஏற்ப்பட்ட உடன்படிக்கை அல்லது விரிவாக்கப்பட்ட கால அளவிற்குள் செலுத்த வேண்டும். ஏலத்தில் வெற்றி பெற்றவர் குறிப்பிட்ட கால அளவிற்குள் மீதமுள்ள தொகையை செலுத்த தவறினால் செக்யூரிட்டி இண்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதி 2002 (9) துணை விதி (5)- ன் படி வைப்பீட்டு தொகை திருப்ப தரப்படமாட்டாது. மேலும் சொத்து மறுஏலத்தில் விற்பனை செய்யப்படுவதுடன் முழு ஏல தொகை செலுத்தாத நபர் மேற்படி சொத்தில் எந்த வித கோரிக்கையையும் பெற தகுதியற்றவர் ஆகிறார்.
5. SARFAESI சட்டத்தின் கீழ் ஏலத்தில் பங்கு கொள்ள கட்டிய வைப்பீட்டிற்கு கண்டிப்பாக வட்டி தாப்படமாட்டாது.
6. அங்கீகாரம் பெற்ற அதிகாரி அறிந்தவகையில் மற்றும் தெரிந்த தகவல்களின் படி, ஏலம் விடும் சொத்தின் பெயரில் எந்த வில்லங்கமும் இல்லை. விற்பனைக்காக உள்ள சொத்தின் மீது ஏதேனும் கட்டணங்கள், பாத்தியதைகள், வில்லங்கங்கள், சொத்து வரி அல்லது அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் இருந்தால் அதற்கு அங்கீகாரம் பெற்ற அதிகாரி பொறுப்பேர்க்கமாட்டார்.
7. ஏலம் எடுக்கும் நபர் சட்டத்தின் படி பொருந்தக்கூடிய பதிவுக்கட்டணம், முத்திரை கட்டணம் போன்ற செலவுகளை அவரே ஏற்று கொள்ள வேண்டியது.
8. அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு எந்த காரணமும் கூறாமல் ஏலத்தை ஏற்று கொள்ளவோ/ நிராகரிக்கவோ/ மாற்றி வைக்கவோ அல்லது ரத்து செய்ய முழு அதிகாரம் உண்டு. விருப்பமுள்ள விலைப்புள்ளிதாரரின் ஏலப்படிவம் ஒழுங்காக இல்லாவிடில் அதை நிராகரிக்க அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு உரிமை உண்டு.
9. ஏலம் விற்பனைக்கான சொத்துக்கள் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைக்கு குறைவாக விற்கப்படமாட்டாது. மேற்படி சொத்துக்கள் "உள்ளது. உள்ளபடி நிலையில்" விடப்படும்.
10. ஏலம் கேட்பவர்கள் தங்களது ஒரிஜினல் அடையாள அட்டையான அதவாது ஆதார் அட்டை, பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ், ரேஷன் கார்டு, வாக்காளர் அட்டை மற்றும் பான் கார்டு (Pan card) ஏதாவது ஒன்றை ஏலத்தில் கலந்து கொள்ளும்போது கொண்டு வர வேண்டும்.
11. விற்பனை சான்றிதழ் ஏலம் எடுத்தவர் பெயரில் மட்டுமே பதிவு செய்து கொடுக்கப்படும் வேறு நபர்கள் பெயரில் கண்டிப்பாக கொடுக்கப்பட மாட்டாது. விற்பனை பத்திரத்தை பதிவு செய்ய பத்திர கட்டணம், முத்திரை கட்டணம் மற்றும் அதற்கு தொடர்புடைய பிற அரசாங்க கட்டணங்கள், வரி முதலியவற்றை ஏலம் எடுத்த நபரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
12. ஏலத்தில் வெற்றி பெற்றவர் / கொள்முதல்தாரர் அவர்களுக்கு வருமானவரி சட்டம் 1961, பிரிவு 194 1A-ன் படி விற்பனை விலையில் 1% TDS கழித்து செலுத்த வேண்டும் மற்றும் அதனை செலுத்தியதற்கான படிவம் 26 QB உடன் ரசீது மற்றும் TDS அசல் சான்றிதழை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். (50.00 லட்சத்திற்கு மேல் உள்ள சொத்திற்கு)
13. மேலும் இந்த விற்பனை அறிவிப்பு www.tmb.in என்ற இணையதளத்தில் பதிவேற்றும் / பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**இடம் : மதுரை**
**தேதி : 24.11.2023**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்,**
**மண்டல அலுவலகம், மதுரை.**
**[சின்னமனூர் கிளைக்காக]**